மாண்புமிகு திரு செ. மாதவன் : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட தொகை குறைகிற காரணத்தினால் 7,500 பேர்கள் வேலையிழக்க நேரிடும் என்கிற பய உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இதையும் நமது முதலமைச்சர் அவர்கள் தம் தந்தியில் கூறியிருக்கிறார்கள்.

ரேயான் தொழிற்சாலை.

*422 வினா திரு. கி. செயராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரேயான் நூல்களுக்கு வேண்டிய ரேயான் கூழ், மரக்கூழ் தயாரிக்கும் ஆலை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், ரேயான் தயாரிப்பதற்கு உதவும் மரக்கூழ், விஸ்கோஸ் நெட்டிழை (Viscose Staple Fibre) முதலியவற்றை தயாரிப்பதற்குத் தமிழ்நாட்டில் ரூ. 30 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழிற்சாலை ஒன்று அமைக்க அனுமதிக் கடிதம் வழங்குமாறு கேட்டு 1973, டிசம்பர் திங்களில் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

Import licences.

*** 423 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(*a*) whether the recommendations of the State Government are obtained by the Union Ministry of International Trade before import licences are issued to parties in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு விதிமுறையின்படி, இந்திய அரசால் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுவதற்கு, தலைமைச் செயலக அளவில் மாநில அரசின் பரிவுரை தேவையில்லை. பொறுப்பேற்கும் அதிகாரியின் பரிவுரை தேவைப்படுகிறது. மாநில அரசின் அத்தகைய அதிகாரிகளையும் அவர்களின் பரிவுரைகள் தேவைப்படுகிற தொழிற்பிரிவுகளையும் காட்டும் விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 465-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 மார்ச 14]

THIRU N. DENNIS : May I know whether the State Government have itemised the commodities for import and export from this State and may I also know the total value of those commodities ?

THE HON. THIRU S. MADHAVAN : This question relates to sponsoring authorities for export permits.

Moral discourses in Jails.

* 424 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether moral discourses were given at Central Jails in this State during the calendar year 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ ஒன்று அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : யாரால் இந்தச் சொற்பொழிவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? சப்ஜெக்ட் யாரால் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறை இலாக்காவால்.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த விவர அறிக்கையில் இப்படிப்பட்ட பாடங்கள் சென்டிரல் ஜெயிலில் நடந்ததாகத் தெரியவில்லை. இதற்கான காரணங்களைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காரணம் எதுவும் இருக்காது. ஒவ்வொரு சிறைச்சாலையிலும் ஆங்காங்கு ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்தச் சிறைச்சாலையில் செய்யாவிட்டால் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவர அறிக்கையில் திருச்சி சிறையிலும் சரி, மற்ற எல்லா சிறைச்சாலைகளிலும் சரி மதபோதனையாகவே செய்யப்படுவதாகத் தெரிகிறதே, மத போதனைகளுக்குப் பதிலாக இன்று நாட்டில் இருக்கக் கூடிய முற்போக்கான கருத்துக்களைச் சொல்லுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 468-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.